நீரோ மன்னன் பிடில் வாசிக்கிறார்! நீதி கேட்கிறது மணிப்பூர்!!

இந்தி யாவின் மூத்த வழக்கறிஞரும், பா.ஜ.க ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்து நீண்ட நாள் பணியாற்றிவந் தவருமான மறைந்த இராம் ஜெத் மலானி. என்ன சொன்னார் மோடியைப் பற்றி....

"நரேந்திர மோடி பிரதமர் ஆவதற்கு ஆதரவு அளித்த தற்காக, பிரச்சாரம் செய்ததற்காக நான் இந்திய மக்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். சுதந்திர இந்தியாவில் இப்படி ஒரு ஏமாற்றுக்காரர் இதுவரை பிரதமராக ஆனதே கிடையாது. என் வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் இருக் கிறேன்; மரண வாயிலில் இருக்கிறேன். எனக்கு வயது 93. பெட்டி படுக்கையெல்லாம் கட்டி வைத்து விட்டேன்; இந்த உலகத்தை விட்டுப் புறப்பட ஆயத்தமாகிவிட் டேன்; அப்படிப் போவதற்கு முன் இந்த நரேந்திர மோடி கூட்டம் இனி மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடக்கூடாது என்பதற்காக என்னென்ன செய்ய முடியுமோ அத்தனை வழிகளிலும் போராடுவேன்."

இப்படியான வார்த்தைகளில் வரிகளில் தனது ஆதங் கத்தை மோடியைப் பற்றி சான்றிதழ் தந்து மரண வாக்கு மூலத்தைத் தெரிவித்திருந்தார் உச்ச நீதிமன்ற முன்னாள் மூத்த வழக்கறிஞர் இராம்ஜெத்மலானி.

"குஜராத்தில் மோடி ஆட்சியில் இருக்கும் போது தான் 2,000 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஒரு லட்சத்து 70 ஆயிரம் வீடுகள் தீக்கு இரையாக்கப்பட்டன. 203 தர்காக்கள், 205 மசூதிகள் சாம்பலாக்கப்பட்டன. 4000 கார்கள், 20,000 இருசக்கர வண்டிகளும் நெருப்பின் பசியை ஆற்றின. ரூபாய் 3800 கோடி இழப்பு என்று மதிப் பிடப்பட்டுள்ளது. 70 ஆயிரம் முஸ்லிம்கள் சொந்த மண் ணிலேயே ஏதிரிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். காவல்துறை யினர் பத்தாயிரம் தோட்டாக்களை பயன்படுத்தி இருக்கின்றனர். இவ்வளவும் மோடி முதலமைச்சராக இருந்த நிலையில் தான் நடைபெற்றன "....என்று விடு தலை ஏடு 2012 ஆம் ஆண்டு ஜூலை 28ஆம் நாள் தலையங்கத்தில் எழுதி இருக்கிறது. அதனை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி ஐயா அடிக்கடி அம்ப லப்படுத்தி வந்துள்ளார்.

அது மட்டுமல்ல; இதே மோடி மீது உச்ச நீதிமன்றம் எப்படிப்பட்ட வார்த்தைகளால் விமர்சனம் செய்தது முத லமைச்சர் மோடியை நீரோ மன்னனுக்கு ஒப்பிட்டு கூற வில்லையா? அப்போது பாஜகவினர் தன் வீரத்தைக் காட் டாமல் மவுனிகள் ஆனது ஏன்?

"மனித நேயத்தின் சிறு சிறு துளிகள் சேர்ந்துதான் மனிதம் உண்டாக்கப்பட்டது. இந்த மனிதம் கொடுங்கோ லர்களிடம் வற்றிப் போய் விட்டதோ ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் பிறந்தவர்கள் என்பதற்காகவா... இவர்கள் எரித்துக் கொல்லப்பட்டார்கள்? என்று உச்ச நீதிமன்ற கேள்வி எழுப்பவில்லையா? மொத்தம் 4,252 வழக்குக ளில் 2000க்கும் மேற்பட்ட வழக்குகள் விலக்கிக் கொள் ளப்பட்ட நிலையில், இந்த வழக்குகளுக்கும் புலனாய்வு மீண்டும் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வைத்த குட்டு மோடியின் தலையில் அல்லவா? மோடி யின் அமைச்சரவையில் முக்கிய பொறுப்பில் இருந்தவர் ஹரேன் பாண்டியா, : மக்கள் விசாரணை ஆணையத்திடம் நடந்தவற்றை அப்படியே வெளியிட்ட நிலையில், அவர் படுகொலை செய்யப்பட்ட பின்னணி என்ன? தனது மகன் படுகொலைக்கு காரணம் குஜராத் முதலமைச்சர் நரேந் திர மோடி தான் என்று ஹரே பாண்டியாவின் தந்தையார் நானாவது ஆணையத்திலும் தெரிவித்தார்."

இப்படி எல்லாம் புட்டு புட்டுப் பல்வேறு ஏடுகள் எழுத மறைத்த செய்திகளை , அந்த உண்மைகளை பெரியாரின் போர்வாள் திராவிடர் கழகத்தின் விடுதலை ஏடு, மோடியை பற்றி உச்ச நீதிமன்றம் கூறிய வரிகளை அப் பொழுதே எழுதி அம்பலப்படுத்தி உள்ளது. இப்பொழுது தெரிகிறதா, "நீரோ மன்னன்" யார் என்று?

2019 ஜம்மு காஷ்மீரின் புல்வாமா பகுதியில் சி.ஆர். பி.எப். வீரர்கள் சென்ற வாகனங்களின் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடந்தது. 40 வீரர்களின் உயிர்களைப் பறித்துத் தேசத்தையே உலுக்கிய அந்தப் பயங்கரச் சம்பவத்தைப் பயன்படுத்தி, இந்திய மக்களைச் திசைதிருப்பி, தனக்குத் தானே தேச பக்த படம் எடுத்துக் கொண்டது மோடி அரசு. ஆனால், 40 வீரர்களின் உயிர் பலியாவதற்கு காரணமே மோடி அரசு தான் என்ற உண்மையை அவர்களது கூட் டத்திற்குள் இருந்த ஒருவர் பகிரங்கமாக உடைத்து இருக் கிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் தி வயர் இணைய இதழில் பிரபல பத்திரிக்கையாளர் கரண் தாப்பர் நடத்திய நேர்காணலில் மோடி இராஜ்யத்தின் அராஜகங்களை அம்பலப்படுத்தி இருக்கிறார் ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக். தாக்குதலில் மோடி மௌனமானது ஏன்? அதற்கான காரணங்கள் என்ன? என்பது பற்றி அவர் மேலும் விளக்கி உள்ளார் என்பதையும் மறந்து விடக்கூ டாது.

இப்பொழுது சொல்லுங்கள்; மோடியின் இதயத்தில் இரக்கம் சுரக்குமா அவரது கண்களில் கண்ணீர் கலங்கி வருமா? மோடியை பற்றி உச்சநீதிமன்றமே சான்றிதழ் தந் திருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

மணிப்பூர் மாநிலம் தீப்பற்றி எரிகிறது. இந்தியாவில் ஒரு நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருக்கிறார். பிரதமரான அவரோ தில்லி செங்கோட்டையில் அமர்ந்து மயிலுக்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கிறார்.

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை மாற்றுச் சமூகத்தினர் அம்மணப்ப டுத்திச் சாலைகள், வயல்வெளிகள் வழியாக ஆயிரக் கணக்கானோர் ஊர்வலமாக இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவு நிகழ்த்திய சம்பவக்கொடுமை நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன. மே 4 அன்று நடந்த மனித நேயமற்ற இச்சம்பவத்தின் 26 வினா டிகள் கொண்ட வீடியோ, ஜூலை 19 அன்று வெளியாகி, நாடு; ஏன் உலகம் தழுவிய அளவில் கடும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இரு பெண்களின் ஆடைகளைக் களைந்து அவர்களது மார்பகங்களைத் தொட்டு ஆயிரம் ஆண்கள் மத்தியில் பொதுவெளியில் அந்தப் பெண்கள் சீரழிக்கப்படுகிறார்கள் என்றால், பிரதமரே இந்நேரம் உங்கள் கண்க ளுக்குத் தூக்கம் தொலைந்து இருக்க வேண் டாமா? ஒன்றிய பெண்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி எங்கே? எங்கே? மகளிர் பாதுகாப்பு அமைப்புப் பொறுப்பில் இருக்கக்கூடிய நடிகை குஷ்பு கள், வானத்திற்கும் பூமிக்குமாகக் குதிக்கும் வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ.க்கள், கங்கனா ரனாவத்துகள் போன்ற இந்திய பா.ஜ.க பெண் மணிகள் எங்கே ஓடிப் போனார்கள்? உட்பரி கைப் பஞ்சனையில் தூங்கிய பா.ஜ.க. தலை வர்கள் இப்போது எந்தப் பதுங்குக் குழியில் போய்ப் படுத்தார்கள்? ஆயிரக்கணக்கான மெய்தை இன இளைஞர்கள், பழங்குடி குக்கி இன இரு பெண்களைச் சீரழித்த இப்படிப் பட்ட அவலநிலை தெரிந்த பா.ஜ.க.வினர் வீட்டு குடும் பப் பெண்களே காறி உமிழ்ந்து துப்ப மாட்டார்களா?

இராம் ஜெத் மலானி

கார்க்கிலில் இந்தியாவுக்காக போரிட்ட முன்னாள் இராணுவ வீரரின் மனைவியான 40 வயதான பெண்மணி, 4குழந்தைகளுக்குத் தாயான தன்னை விட்டு விடுமாறு கெஞ்சிக் கதறியும், அந்தக் கொடூரர்கள் விடாமல், 20 வயது இளம் பெண்ணையும் வல்லுறவுக்கு உள்ளாக்கிய தோடு, காப்பாற்ற வந்த மற்றொரு இளம் பெண்ணின் 56 வயது தந்தையையும், 19வயது சகோதரனையும் அந்த கும்பல் அடித்தே கொன்ற கொடுஞ்செயலானது நாடு

முழுவதும் கண்டன முழக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

பிஷ்ணுபூர் மாவட்டத்தில் டேவிட் தீக் என்ற குக்கி இன இளைஞரைத் துண்டுத் துண்டாக வெட்டப்பட்டு அவரது தலையை மூங்கில் குச்சிகளால் ஆன வேலிகளில் செருகப்பட்டிருந்த கொடுஞ்செயல் பற்றிய வீடியோ வெளியாகிப் பதைபதைப்பை உருவாக்கியிருக்கிறது. இப் படுகொலையைச் செய்தவன் ரோமேஷ் மாங்காங் என்ப வன் என்றும், இவன் கும்பி தொகுதி பா.ஜ.க. எம். எல்.ஏ.யான சாந்தி குமார் என்ற சனிசம் பிரேம்சந்தர சிங் கின் பாதுகாவலன் என்றும், தக்க புகைப்பட ஆதாரங்க ளோடு வெளியாகி இருக்கிறது.

இந்நிலையில், "மணிப்பூர் தொடர்பாக வெளிவரும் வீடியோ எங்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. அரசு நடவடிக்கை எடுக்காவிடில், உச்ச நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும் என்று வருத்தத்துடன் கூறியுள்ளார் உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி சந்திர சூட். "மணிப்பூர் மாநில இந்திய ஒன்றிய பாஜக அரசு என்ன செய்கின்றன? மணிப் பூரில் பெண்கள் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய் யப்பட்ட கொடூரத்தில் என்ன நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டுள்ளது? இந்தக் கொடூரச் சம்பவத்தை ஏற்க முடியாது. இந்த விவகாரத்தில் மாநில ஒன்றிய அரசுகள் உடனடியாகத் தலையிட்டுத் தலையிட வேண்டும். இல் லாவிட்டால், நேரடியாக உச்ச நீதிமன்றமே தலையிடும்." என்று கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாத மணிப்பூர் ஒன்றிய அரசுகள், மக்கள் விரோதப் போக்கினை வெளிப் படுத்தும் வகையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தமது கருத்து தெரிவித்துள்ளார்.

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

ஏற்கெனவே, மணிப்பூர் பழங்குடியினர் அமைப்பு (Tribal Forum) என்ற தன்னார்வ அமைப்பு உச்சநீதிமன் றத்தில் ஓர் இடைக்கால மனு ஒன்றை (1172023) அன்று அளித்திருந்தது. "மணிப்பூரில் குக்கி பழங்குடியினர் இன அழிப்புச் செய்யும் கொள்கையை ஒன்றிய அரசும், மாநில முதல்வர் பைரேன் சிங்கும் பின்பற்றி வருகின்றனர். இந்த வன்முறை சம்பவங்களுக்குக் காரணமான ஆயுத மேந்திய பாஜக ஆதரவுக் குழுக்கள் தான் காரணம். எனவே, ஒன் றிய அரசின் வெற்று வாக்குறுதிகளை நம்பாமல், குக்கி பழங்குடியின சமூகத்தினருக்கு இராணுவத்தினர் மூலம் பாதுகாப்பு அளிக்க உச்சநீதிமன்றம் உறுதி செய்ய வேண் டும்" என்று வலியுறுத்தி அந்த மனுவில் கூறியிருந்தது.

ஆனால், இராணுவம், துணை இராணுவம் உள்ளிட்ட வைகளுக்கு, இவ்வாறுதான் பாதுகாப்பு வழங்க வேண் டும் என்று உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பிக்க இய லாது என்று கூறிய நீதிபதிகள் மனுவைத் தள்ளுபடி செய்திருந்தனர். அதே நேரத்தில், மறு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தில், விரிவான அறிக் கையை. அரசுகள் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத் தரவிட்டதோடு, "கலவரத்தை தடுக்க எடுக்கப்பட்ட நட வடிக்கைகள், மறுவாழ்வு நடவடிக்கைகள்; சட்ட ஒழுங்குப் பிரச்சனைகள்; கைது நடவடிக்கைகள் என்னென்ன? எவ்வளவு ஆயுதங்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட் டன? எத்தனை நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன? இப்பொழுது இயல்பு நிலை திரும்ப என்னென்ன நடவ டிக்கை ஒன்றிய மாநில அரசுகள் எடுத்துள்ளன? என்ற தகவல்கள் அடங்கிய அறிக்கை அளிக்க வேண்டும் என்று கூறியிருந்தது.

இவ்வாறு உள்நாட்டில் ஏற்பட்டுள்ள இனக் கலவரப் படுகொலைகள் உள் ளிட்ட மாநில மக்கள் வாழ்வாதாரம் இழந்த கவலை தோய்ந்த சூழ்நிலையில், மணிப்பூர் மாநிலத்தை எட்டிக் கூடப் பார்க்காத இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, வெளிநாடுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டது ஏன்?

மே 19 முதல் 21 வரை ஜப்பான்; மே 21 முதல் 22 வரை பப்புவா , நியுகினியா நாடுகள், ; மே 22 முதல் 24 வரை ஆஸ் திரேலியா, ஜூன் 20 முதல் 23 வரை அமெரிக்கா, ஜூன் 24 முதல் 25 வரை எகிப்து, ஜூலை 13 முதல் 15 வரை பிரான்ஸ், ஜூலை 15 துபாய் என்பன போன்ற நாடுகளைச் சுற்றி வரப் பல லட்சம் கோடி இந்திய மக்களுடைய பணத்தைச் செலவழித்துப் பெருமை பீற் றிக் கொண்டு இந்தியா திரும்பி வந்தாரே மோடி எதற் காக? மணிப்பூர் விவகாரத்தை கண்டுகொள்ளாத மோடி யைப் பற்றி அமெரிக்கா வந்தபோது பலரும் க்ரை மினிஸ்டர் என்று பதாகை வைத்து கிண்டல் செய்திருந்த னர். அதைப்போல, இங்கிலாந்து ஹொரால்டு போன்ற ஆங்கில ஏடுகள் மோடியை பற்றி கடுமையாக விமர்சனம் செய்திருந்தன.

இதற்கிடையில் நாட்டின் தலைமை அமைச்சர் மோடி, மத்திய பிரதேச போபாலில் நடைபெற்ற பா.ஜ.க.வினர் ஏற்பாடு செய்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். 102 ஆவது 'மன் கி பாத்' வானொலி நிகழ்ச் சியில் உரையாற்றுகிறார். (18062023,) இவற்றில் எந்த நேரத்திலும், மணிப்பூர் மாநிலத் துயர நிகழ்ச்சியைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கவலைப்பட்டுப் பேசிட மோடி வாய் திறந்தது கிடையாது.

இது பற்றி காங்கிரஸ் தலைவர்கள் இராகுல், தமது நறுக்கொலிப் (டுவிட்டர்) பதிவில் "மணிப்பூர் எரிகிறது. ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் இந்திய உள் விவ காரம் பற்றித் தீர்மானம் போடுகிறது. ஆனால், பிரதமர் மோடியோ மணிப்பூர் கலவரம் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை ஏன்?" என்று கண்டனம் தெரிவித்திருந்தார் . மணிப்பூர் வன்முறை குறித்து பல தலைவர்கள் கண்ட னம் தெரிவித்தனர். பிரதமர் மோடியின் மன் கி பாத் உரை கேட்ட சாமுருகெய்தல் எனும் ஊரில் அதிர்ச்சி அடைந்த 50க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டு வானொலிப் பெட்டி உடைப்பு எரிப்பு போராட்டம் நடத்தினர்.

இதுவரை மோடி அதற்குப் பதில் தெரிவிக்கவில்லை. அத்துடன் மணிப்பூர் மாநிலக் கலவரம் குறித்து பேச பத்து எதிர்க்கட்சிகள் சார்பில் ஏற்கெனவே கடிதம் எழுதப்பட் டது அந்த கடிதத்தில் மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறைக்கு பாஜகவின் பிரித்தாளும் கொள்கையே காரணம். மணிப்பூர் முதல்வர் பைரோன்சிங் தான் இந்தச கலவரத்திற்குக் காரணம்.

இதற்கு நேரம் ஒதுக்காமல் மோடி வெளிநாடு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது என்பது வருத்தத்துக்குரி யது. இதில் ஒன்றிய மாநில பா.ஜ.க அரசுகளுக்கு அக் கறை இல்லை என்பதே காட்டுவதாக உள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டினர். மணிப்பூர் லிவகாரத்தில் தலையிட பிரதமர் தலையிட வலியுறுத்துவதற்காக அவரை சந்திக்க கடந்த பல நாட்களாக மணிப்பூர் தலை வர்கள் நேரம் கேட்டு டெல்லி வீதிகளில் காத்துக் கிடந்த னர் ஆனால் அவர்களுக்கு இன்று வரை இன்னும் நேரம் ஒதுக்கப்படவில்லை இந்த விவகாரம் மேலும் தொடர்வ தற்கு காரணம் புறக்கணிப்பதற்கு காரணம் பார்க்கும் போது பிரதமர் மோடியும் பாஜகவும் நீடிக்க விரும்புவது காட்டுகிறது.

உக்ரைன் உருசியப் போரை முடிவுக்கு கொண்டு வர நாட்டாண்மை செய்வதாகக் கூறிக் கொள்ளும் மோடி, இந்திய நாட்டில், மணிப்பூரில் உள்நாட்டு கலவரம் ஏற் பட்டிருப்பதைப் பற்றிப் பேச மறுப்பது ஏன்?

மணிப்பூர் பெண்களுக்கு ஏற்பட்ட அவல நிலையைக் குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நறுக்கொலியில் (ட்விட்டர்) தன் வருத்தத்தை தெரிவித் திருந்தார். "மணிப்பூர்பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப் பட்ட வன்முறையால் மனம் உடைந்து அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளேன். கொடும் செயல்களுக்கு எதி ராக நாம் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்; இரக்கமும், மரியாதையும் கொண்ட ஒரு சமூகத்தை வளர்த்தெடுக்கும் பாதை நோக்கிப் பணியாற்ற வேண்டும்.."

மேலும் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர் கள் தலைமையில், தமிழ்நாடு முழுவதும் கழக மகளிர் அணி அமைப்பினர் நடத்திய பெருந்திரள் ஆர்ப்பாட்டம் மூலம் மாநில ஒன்றிய அரசுகள் கண்டுகொள்ளாத மணிப் பூர் கொடூரப் பாலியல் வன்முறையைக் கண்டித்து முழக் கமிட்டு இருக்கிறது.

மணிப்பூரில் பாலியல் கொடூர சம்பவம் குறித்து விவா திக்க மறுத்ததாலும் இந்திய தலைமை அமைச்சர் மோடி அவைக்குப் பதில் கூற வராததாலும், பாராளுமன்ற இரு அவைகளிலும் அமளி ஏற்படுத்தி இருக்கிறது. இரு அவை களும் 5நாள்களாக ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. திமுக சார்பில் டி.ஆர். பாலு, கனிமொழி, திருச்சி சிவா, ஆ. இராஜா, தயாநிதி மாறன் போன்றோர் காங்கிரசு, திரிணா முல் காங்கிரஸ், பொதுவுடைமைக் கட்சிகள் என அனைத் துக் கட்சி உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து நின்று அவையில் போராடி வருகிறார்கள்.

மலைவாழ் சிறுபான்மை கிருத்துவ மக்கள் மீது நடத் திய காட்டுமிராண்டித் தாக்குதலும், மலைவாழ் பெண்க ளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் கண்டு மோடி யின் ஆட்சியில் இந்தியாவே தலை குனிந்து நிற்கிறது. இதற்காக நாம் வெட்கப்படுகிறோம். வேதனை படுகி றோம். இதனை எச்சரிக்கை செய்கிற விதத்தில், நாம் வருகிற தேர்தலைச் சந்திப்போம். பா.ஜ.கவை தில்லி நாற்காலியில் இருந்து தூக்கி எறிவதற்கு உறுதிமொழி எடுப்போம்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! 28வது வட்ட இளைஞர் அணி சார்பில்

மாபெரும் கிரிக்கெட் போட்டி! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை!

டி.ராமகிருஷ்ணன் முன்னிலை! மிசா பா. மதிவாணன் -எஸ்.நந்தகோபால் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 27-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன் னிட்டு மாதவரம் 28வது வட்ட தி.மு.க. இளைஞர் அணி சார் பில் நான்காவது நிகழ்ச்சியாக மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சென்னை வட கிழக்கு மாவட்ட கழகச் செய லாளர் மாதவரம் எஸ்.சுதர்ச னம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட துணை செயலாளர் டி.ராமகிருஷ்ணன் விழாவிற்கு முன்னிலை வகித்தார்.

தலைமை செயற்குழு உறுப் பினார் மிசா.பா.மதிவாணன், மண்டலம்.3குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம்,

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராய ணன்,28வது வட்டக் கழக செயலாளர் எம்.பிரேம்குமார், 28 வது வட்ட கழக துணை செயலாளர் டி.ஆர்.செங்குட்டு வன், உதயநிதி ஸ்டாலின் ரசி கர் மன்ற மாதவரம் பகுதி தலைவர் டி.ஆர்.ரவிந்திரகு மார் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை சிறப் பித்தனர்.

இதில் வெற்றி பெற்ற வீரர் களுக்கு 28 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.கனிமொழி சுரேஷ், கோப்பையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.எம். பன்னீர்செல்வம், எஸ்.ஆரோக் கியராஜ், எஸ் .நிஷார் அஹ மத், ஏ.சுப்ரமணி, ஜி.பாபு, எம். நாகராஜ், டி.ஆனந்தன், யு.விஜய் உதயசூரியன், வினோத், பி.நிர்மல், யு. ரோஷன், ச.வினோத், பா. நெல்சன், கே.மணிகண்டன். பி.ஜீவா, என்.கே. மணிகண் டன், எம். முகேஷ், டி. கார்த்தி, கரண் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 28வது வட்ட இளைஞரணி தி.மு.க. செய்திருந்தது.

சென்னை வடகிழக்கு மாவட்ட முன்னாள் மீனவர் அணி துணை அமைப்பாளர்

செங்குன்றம் பி.செல்வம் 2-ஆம் ஆண்டு நினைவு நாள் !

புழல் பி.சரவணன் தலைமையில் கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூலை 27-

சென்னை வடகிழக்கு மாவட்ட முன்னாள் மீனவர் அணி துணை அமைப்பாள ரும், புழல் ஒன்றிய கழக பிரதி நிதியுமான செங்குன்றம் பி. செல்வத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு அவரது திருவுருவப்பட திறப்பு மற்றும் பொது மக்க ளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி செங்குன் றம் ஜி.என்.என்.டி. சாலை அருகே நடைபெற்றது.

புழல் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் புழல் பி.சரவ ணன் தலைமை தாங்கினார். பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார், பொதுக்குழு உறுப்பி னர் ஜெய் மதன், பேரூராட்சி துணைத் தலைவர் விப்ர நாரா யணன், முன்னாள் பேரூ ராட்சி துணைத்தலைவர் இரா ஏ.பாபு, ஒன்றிய அவைத்தலை வர் வழக்கறிஞர் செல்வமணி ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

செல்வத்தின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து 500 பேருக்கு அறு சுவை உணவு புடவைகள் ஆகி யவற்றை ஒன்றிய செயலாளர் சரவணன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர் வாகிகள் திராவிட மணி, அருள் தேவனேசன், சீனிவா சன், கபிலன், முனீஸ்வரி, சுகு மார், சந்திரசேகர், பாஸ்கர், வடகரை விஜி, கே.கே.ராமன், இலக்கியன், கார்த்திக், கோட் டீஸ்வரன், பால்ராஜ், ராம தாஸ், வெங்கடேசன், மோகன சுந்தரம், பி.டி.சி. சங்கர், ஏழுமலை, நாகராஜி, வடி வேல், திருமலை, திராவிட டில்லி, யுவராஜ், வாசுதேவன், கிருஷ்ணகுமார், சாம் கார்த் திக், சாந்தகுமார், முருகன், ராஜி, கார்த்திக், ஆகாஷ், டெல்லி பாபு உட்பட ஏராள மான கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை புழல் ஒன்றிய பிரதிநிதி செங் குன்றம் பி.அன்பு செய்தி ருந்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு- தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! சொ.வேலு தலைமை!

எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் கருத்தரங்கம்!

நடிகர் தம்பி ராமைய்யா புலவர் ராமலிங்கம் - கவிஞர் கவிதா ஜவகர் கருத்துரையாற்றுகின்றனர்!

சென்னை, ஜூலை. 27

சென்னை கிழக்கு மாவட் டம், எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழா முன்னிட்டு கருத்தரங்கம் நாளை (28.7.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, லட்சுமி மஹால், பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் நடைபெறுகிறது.

எழும்பூர் வடக்கு பகுதி கழ கச் செயலாளர் சொ.வேலு எம்.சி. தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலா ளர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக் கின்றனர்.

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, தெற்கு பகுதிச் செயலாளர் வி.சுதாகர் ஆகியோர் வரவேற் புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் நடிகர் தம்பி ராமையா, புலவர் ராம லிங்கம், கவிஞர் கவிதா ஜவகர் ஆகியோர் கருத்துரை ஆற்று கின்றனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி களின் அமைப்பாளர்கள் மற் றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

78 (அ) வட்டக் கழகச் செய லாளர் ந.பாலு, 78 வது வட்டக் கழகச் செயலாளர் சு.மனோகர் நன்றி கூறுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் பள்ளி கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி ஆவடியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியான இமாக்குலேட் இருதய மேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 687 மாணவிகளுக்கு 34 லட்சத்து 29 ஆயிரத்து 504 ரூபாய் செலவில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இதில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி துணை மேயர் சூரியகுமார், திருவள்ளூர் மாவட்ட கல்வி முதன்மை அலுவலர் கோ.சரஸ்வதி, பொன்னேரி கல்வி அலுவலர் மாநகர செயலாளர் சன்பிரகாஷ், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி பகுதி செயலாளர்கள் நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன், தலைமை ஆசிரியர் மெர்சி பாத்திமா, வட்ட செயலாளர் ஜெயந்தன், உட்பட கவுன்சிலர்கள் கட்சி நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள் பள்ளி மாணவிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஜெ.நடராஜன் தலைமை! நங்கநல்லூரில்

கலைஞர் நூற்றாண்டு விழா கைப்பந்து போட்டி!

மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன் பரிசுகள் வழங்கினார்!

ஆலந்தூர், ஜூலை, 27-

கலைஞர் நூற்றாண்டு விழா கைப்பந்து போட்டி நங்கநல்லூரில் உள்ள லட் சுமி நகர் பூங்காவில் நேற்று முன்தினம் நடந்தது.

காலை முதல் மாலை வரை நடந்த இந்த போட் டியில் 12 அணிகள் பங்கேற் றன. இறுதி போட்டி மற் றும் பரிசளிக்கும் விழா நேற்று மாலை நடந்தது. விழாக்கு, ஆலந்தூர் 167-வது வட்ட திமுக செயலா ளர் ஜெ.நடராஜன் தலை மை வகித்தார்.

இதில் விளையாட்டு வீரர்கள் கண்ணையா, வேலு, பிரான்சிஸ், ரமணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இறுதி போட்டியில் வெற்றிபெற்ற ஜே.பி.ஆர். அணிக்கு ஆலந்தூர் மண்ட லக்குழு தலைவர் என். சந்தி ரன் ரொக்க பரிசு மற்றும் கோப்பை வழங்கினார். இந்த விழாவில் வணிகர் நல வாரிய உறுப்பினர் ஜெய ராம் மார்த்தாண்டன், தென்சென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலை வர் அய்யம்பெருமாள், வேலவன், குருமூர்த்தி ,சதீஷ்,சரவணன்,உட்பட பலரும் கலந்து கொண்ட னர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நங்கநல்லூரில் நடந்த கைப்பந்து போட்டியில் 12 அணிகள் மோதின. ஆலந்தூர் 167-வது வட்ட திமுக செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையிலும் விளையாட்டு வீரர்கள் கண்ணையா, வேலு, பிரான்சிஸ், ரமணா ஆகியோர் முன்னிலையிலும் பரிசளிப்பு விழா நடந்தது. வெற்றிபெற்ற ஜே.பி.ஆர்.அணிக்கு ஆலந்தூர் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன் ரொக்கப்பரிசு மற்றும் கோப்பை வழங்கினார். இதில், வணிகர் நல வாரி